ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை
SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
MINISTRY OF INVESTMENT PROMOTION

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் (SLEDB) தேசிய கரிம கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு (NOCU) 02 சர்வர் இயந்திரங்கள், மெய்நிகராக்க மென்பொருள் (Virtualization Software), ஒரு UPS முறைமை மற்றும் ஒரு மடிக்கணினி வழங்கல்

**Contract No. EDB/2023/NOCU/002**

1. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தேசிய கரிம கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு (NOCU) 02 சர்வர் இயந்திரங்கள், மெய்நிகராக்க மென்பொருள் (Virtualization Software), ஒரு UPS முறைமை மற்றும் ஒரு மடிக்கணினி வழங்கலுக்காக பொருத்தமான சேவை வழங்குநர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கூறுவிலைமனுக்கள்/முன்மொழிவுகளை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை கோருகிறது.
2. தேசிய போட்டி ரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படுவதோடு விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து 66 நாட்காட்டி தினங்கள் வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
3. தகுதியுடைய விலைமனுதாரர்கள் மேலுள்ள பெறுகைக்காக சட்ட உரிமையை பெற்றிருக்க வேண்டும். விலைமனுதாரர்கள் 2007 இன் 07 ஆம் இலக்க சட்டம் அல்லது 1982இன் 17 ஆம் இலக்க பணிப்பாளர்கள் சட்டத்தின் குறிப்புகளின் பிரதி ஒன்று மற்றும் 1990இன் 4 ஆம் இலக்க கூட்டிணைக்கப்பட்ட வர்த்தகப் பெயர் சட்ட வர்த்தகப் பெயர் கட்டளையின் கீழ் (உறுப்புரை 149) வெளியிடப்பட்ட நிறுவனம் ஒன்றின் பதிவுச் சான்றிதழின் பிரதி ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் விலைமனுவுடன் 1987இன் இல. (03) (PCA) பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பதிவின் அசலையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகைமைக்கு வெற்றிகரமான விலைமனுதாரர்கள் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.
   - எந்த ஒரு அரச நிறுவனத்தினாலும் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் 1987, 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
5. “Announcement” இன் கீழ் www.srilankabusiness.com என்ற EDB இணையதளத்தில் இருந்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை தரவிறக்கம் செய்ய முடியும்.
6. இலங்கை வங்கியின் லேக் வியுவ் கிளையில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் 306605 என்ற கணக்கு இலக்கத்திற்கு 2,000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை வைப்புச் செய்ய வேண்டும் என்பதோடு வைப்புச் செய்த பற்றுச்சீட்டின் பிரதியை விலைமனு ஆவணத்திற்கு இணைத்தல் வேண்டும். (வைப்பு பற்றுச்சீட்டின் பிரதி ஒன்று இல்லாத விலைமனு ஆவணம் செல்லுபடியான ஆவணமாக ஏற்கப்படமாட்டாது).
7. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனு ஆவணத்தைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “EDB இன் தேசிய கரிம கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு (NOCU) 02 சர்வர் இயந்திரங்கள், மெய்நிகராக்க மென்பொருள் (Virtualization Software), ஒரு UPS முறைமை மற்றும் ஒரு மடிக்கணினி வழங்கல்” எனக் குறிப்பிட்டு 2023.06.05ஆம் திகதி பி.ப. 02.00 அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (DPC), இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, பெறுகைப் பிரிவு, 6ஆவது மாடி, NDB-EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு கைகளால் சேர்த்தல் அல்லது பெறுகைப் பிரிவில் (கட்டம்-06) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும். அதன்பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
8. இறுதி நேரத்தில் சமர்ப்பிக்கப்படும் கேள்விமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக்கள் ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழு வசமானது.
9. விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனு திறக்கப்படும் நேரத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.
10. மேலதிக விபரங்களுக்கு 011-0300704, 071-9708044 அல்லது 011-2300705-11 (நீடிப்பு: 301) என்ற தொலைபேசி இலக்கங்களில் IT பிரிவு/ பிரதிப் பணிப்பாளர, திரு சமன் சிசில் அவர்களை தொடர்புகொள்ளவும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு (DPC)**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**
**NDB-EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02**
**தொ.: 011-2300705 -11 தொலைநகல்: 011-2300728**
**இணையதளம்: www.srilankabusiness.com**